முருகப்பெருமான் துணை

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.11.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. வள்ளலாய் வந்த ஞானியே
வாழுகின்ற காலமே உலகோர்
வல்லமைபட ஞானவழித் தேற
வரங்கள் தருகின்ற தவசியே

2. தவசியே ஆறுமுக அரங்கனே
தருமனே உன்பெருமை கூறி
அவனியில் சோபகிருது தேள்திங்கள்
அச்சமற சூலதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03 ம் நாள், 19.11.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
வழங்குவோம் ஆழ்வார்களும்
வரம்பெற்ற நாயன்மார்களை தொடர்ந்து
வழுத்துவேன் இன்று தானும்

4. தானும் பொய்கை ஆழ்வாரும்
தரணி பாதுகாப்புற உரைப்பேன்
ஞானமோடு அன்னதானமெனும்
நல்வழி காட்டும் அரங்கன்

5. அரங்கன் மார்க்கம் சிறந்தது
ஆக்கினை ஆபத்தை விரட்டி
வரங்கள் தரும் மார்க்கமிது
வணங்கி ஏற்றுக் கொண்டு

6. கொண்டுமே உலகோர் தானும்
குடிலாம் ஏழாம்படை வீட்டை
தொண்டர்களாகித் தொடர
தேசிகன் தரும் தீட்சை பலம் ஏற்று

7. ஏற்றுமே சீடர்களாக அடையாளம்
இவைபிறவி கண்டு விட
மாற்றம் தானாக நடக்கும்
மரணம் அனுகா காப்புடன்

8. காப்புடன் மறுமை வெல்கின்ற
கந்தவேலன் அனுகூலம் கூடி
ஒப்புகொண்டு உலக ஞானிகள்
உடன்வந்து ஆசிதருகின்ற

9. ஆசிதருகின்ற ஞானவான்களாக
அகிலத்தில் தேறி இனிதே
வாசிவென்ற மக்களாக
வையகம் தனில் அரங்கன் வழி

10. வழிதனில் ஞானிகளாகவே
வலம் வருவர் அச்சமற
தெளிவு திடமுற இன்னலின்றி
தெய்வபலம் மிக்கவர்களாகி

11. ஆகியே தேசநலம் காப்பர்
அரங்கன் நோக்கம் நிறைவேற
அகிலத்தில் ஞான ஆட்சிபடைப்பர்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—